Registered as a Newspaper

பக்கங்கள் 12

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 210

சனிக்கிழமை 24 ஜூன் 2023

ஆனி 09 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



# ரணில் சொன்னதில் உண்மை உள்ளதாம்!

## ‘முட்டுக்’கொடுக்கிறார் விக்னேஸ்வரன்

யாழ்ப்பாணம், ஜூன் 24
ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க லண்டனில் தெரிவித்த கருத்துக்களில் ஓரளவு உண்மை உள்ளது. அவர் குறிப்பிடத்தக்களவு விடயங்களைச் செய்தும் இருக்கின்றார் - இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற »11

# லண்டனில் ரணில் பொய்யுரைக்கிறார்

## தமிழ்த் தலைவர்கள் சீற்றம்



யாழ்ப்பாணம், ஜூன் 24

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க லண்டனில் தெரிவித்தமை போன்று நாட்டில் நிலைமை இல்லை. அவர் பச்சைப் பொய்யுரைக்கின்றார் என்று தமிழ்த் தலைவர்கள் தெரிவித்தனர்.** »11

# கனடாவுக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டம்!

கொழும்பு, ஜூன் 24
இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்று கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ வெளியிட்ட அறிக்கைக்கு எதிராகவும், இலங்கைக்கு எதிரான கனடா »11

# இலங்கையில் இனப்படுகொலை நடந்தது என்பது உண்மையே!

## நிலைப்பாட்டில் மாற்றமில்லை கனேடியத் தூதரகம் அறிக்கை

கொழும்பு, ஜூன் 24
இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்பது கனேடிய அரசாங்கத்தின் நிலைப்பாடு. இந்த நிலைப்பாட்டில் மாற்றங்கள் இல்லை என்று இலங்கைக்கான கனேடியத் தூதரகம் அறிக்கையிட்டுள்ளது. 2023ஆம் ஆண்டு மே மாதம் »11

# ரூபா உயர்வு!

கொழும்பு, ஜூன் 24
அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி நேற்று கணிசமான அளவு உயர்வடைந்தது. இலங்கை மத்திய »11

### சமுர்த்திக் கொடுப்பனவு

# ஜூன் 30ஆம் திகதிவரையில் மேன்முறையீட்டுக்கு வாய்ப்பு

## மன்னார் சமுர்த்திப் பயனாளிகள் போராட்டம் நிறைவுக்கு வந்தது

மன்னார், ஜூன் 24
ஜூன் மாதம் 30ஆம் திகதி வரையில், சமுர்த்திக் கொடுப்பனவு பெறுவதற்கு மேன்முறையீடு செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டதையடுத்து, மன்னாரில் பாதிக்கப்பட்ட சமுர்த்திப் பயனாளிகள் மேற்கொண்ட போராட்டம் முடிவுக்கு வந்தது.
நலன்புரி நன்மைகள் சபையால் வெளியிடப்பட்டிருக்கும் புதிய சமுர்த்திப் பயனாளி »12

# சமுர்த்தி அலுவலர்கள் பற்றி முறைப்பாடுகள் குவிகின்றன!

## நடவடிக்கைக்குத் தயங்கேன் என்று யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24
சமுர்த்தி உத்தியோத்தர்கள் தொடர்பில் பல முறைப்பாடுகள் கிடைக்கின்றன. அந்த முறைப்பாடுகள் உறுதிப்படுத்தப்பட்டால் நடவடிக்கை எடுப்பதற்குத் தயங்கமாட்டேன் என்று யாழ்ப்பாணம் மாவட்டச் செயலர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.
யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி »11

# 200 கிராம் ஐஸ் போதையுடன் யாழில் ஒருவர் நேற்றுக் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 24
முல்லைத்தீவு பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால், கொழும்புத்துறை சந்தி »11

# தமிழ் அரசியல்கைதி தேவதாஸ் விடுதலை

கொழும்பு, ஜூன் 24
சிறையில் பல வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல்கைதியான தேவதாஸ் கனகசபை ஜனாதிபதியின் பொதுமன்னிப் »12



# பிரபாகரனின் உயிரிழப்பை இலங்கை நிரூபிக்கவில்லை

## ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24
தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிரிழந்தார் என்பதனை இலங்கை அரசு நிரூபிக்கவில்லை என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொழும்புக் கிளைத்தலைவரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான கே.வி.தவராசா தெரிவித்தார்.
யாழ்ப்பாணத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:- விடுதலைப் புலிகளின் தலை »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலட்டைப் பண்ணைகள் நன்மைகள் அளிக்குமாம்

## உலக வங்கி அறிக்கைக்கு எதிர்ப்பு இன்று கூடி ஆராய்வு



**யாழ்ப்பாணம், ஜூன் 24**

**யாழ்.குடாப்பரப்பில் அமைக்கப்படும் கடலட்டைப் பண்ணைகள் பொருளாதார ரீதியான நன்மைகளை அளிக்கும் என்ற தோரணையில் உலக வங்கி வெளியிட்ட அறிக்கை தொடர்பில் 20 கடற்றொழிற்சங்கங்கள் மற்றும் 4 கடற்றொழிலாளர் சமாசங்கள் கூடி கலந்துரையாடவுள்ளன.**

யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனங்களின் சமாசத்தின் முன்னாள் தலைவர் அன்னலிங்கம் அன்னராசா நேற்று வெள்ளிக்கிழமை இந்த விடயத்தை ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.குடாநாட்டுக் கடற்பரப்புகளில் அமைக்கப்பட்டு வரும் கடலட்டைப் பண்ணைகளால் பொருளாதார ரீதியான நன்மையை அடையலாம். எதிர்வரும் 2025ஆம் ஆண்டில் பெரும் ஏற்றுமதியை மேற்கொள்ளமுடியும் என்று உலக வங்கி அறிக்கை ஒன்றை அண்மையில் வெளியிட்டுள்ளது.

சீன நிறுவனமொன்றுடன் இணைந்து அதனை மேற்கோள்காட்டி இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மீனவர்களினுடைய கருத்துகள் எதையும் உள்வாங்காது - கடலட்டைப் பண்ணைகளால் ஏற்படுகின்ற சமூகச் சூழல் பாதிப்புகளையும் கருத்திற்கொள்ளாது இந்த அறிக்கையை உலக வங்கி வெளியிட்டுள்ளது. இது சீனாவினுடைய பினாமிகளுக்கு ஆதரவு வழங்குவதாகவே சந்தேகம் எழுகிறது. இதனை ஏற்றுக்கொள்ள முடியாது. அதற்கமைய நாளை (இன்று) சனிக்கிழமை யாழ். நகரில் 20 கடற்றொழிற்சங்கங்கள் மற்றும் நான்கு கடற்றொழிலாளர் சமாசங்கள் கூடி இதுதொடர்பில் ஆராயவுள்ளோம்- என்றார். (ச-125)

# ஜூன் 30 விடுமுறை

கொழும்பு, ஜூன் 24

எதிர்வரும் 30ஆம் திகதி வெள்ளிக்கிழமை விசேட வங்கி விடுமுறை தினமாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

29ஆம் திகதி ஹஜ் பெருநாளை முன்னிட்டு மறுநாள் 30 ஆம் திகதி இந்த விசேட வங்கி விடுமுறை வழங்கப்படுகிறது. (ச-ரி)

# பேஸ்புக் உரையாடல் சிறுவன் துஷ்பிரயோகம்!

கொழும்பு, ஜூன் 24

பேஸ்புக் போலிக்கணக்கில் பெண்ணென அறிமுகப்படுத்தி 14 வயது சிறுவனை பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கிய சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

கம்பஹா பிரதேசத்துக்கு வரவழைக்கப்பட்டு சிறுவன் மீது பாலியல் துஷ்பிரயோகம் புரியப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுவன் தரம் - 10 இல் கல்வி பயிலும் மாணவன் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சிறுவனின் தந்தை வழங்கிய முறைப்பாட்டுக்கமைய சந்தேக நபரின் போலி பேஸ்புக் உள்ளிட்ட தகவல்கள் பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)



# 10 வயதுச் சிறுமி மீது பாலியல் வன்கொடுமை

## கொழும்பில் கொடூரம்

கொழும்பு, ஜூன் 24

கொழும்பில் உள்ள பிரபல மகளிர் பாடசாலையில் கற்கும் 10 வயதுச் சிறுமியொருவர் மீது 8 தடவைகள் பாலியல் வன்கொடுமை புரியப்பட்ட சம்பவம் பதிவாகியுள்ளது. சிறுமியின் உடலின் சில பாகங்களில் சிகரெட்டால் சுடப்பட்ட தடயங்களும் காணப்படுகின்றன எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாள்களாக சிறுமியின் நடத்தையில் மாற்றம் ஏற்பட்டதைக் கவனித்த வகுப்பாசிரியர் பொலிஸாருக்கு தகவல் வழங்கினார்.

சிறுமி சட்டமருத்துவ அதிகாரி முன்னிலையில் பரிசோதனைக்குட்படுத்தப்பட்டபோது, சிறுமி 8 முறை வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டமை தெரியவந்துள்ளது எனப் பொலிஸார் நீதிமன்றுக்கு அறிவித்துள்ளனர்.

அதற்கமைய சிறுமியை கொழும்பு லேடி ரிட்ஜ்வே சிறுவர் மருத்துவமனையில் சேர்த்து சிகிச்சை அளிக்குமாறும் சந்தேகநபரை உடன் நீதிமன்றில் முற்படுத்துமாறும் கொழும்பு நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (ச-இ)

# பொலிஸாருக்கே தண்ணிகாட்டிய மணற்கொள்ளைக் கும்பல்

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, ஜூன் 24

மணற்கடத்தலில் ஈடுபட்ட டிப்பர் வாகனத்தையும் கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரையும் குற்றப் புலனாய்வுப் பிரிவினரின் பிடியிலிருந்து 6 பேர் கொண்ட கும்பலொன்று கடத்திச் சென்றுள்ளது.

இந்த அதிர்ச்சிகர சம்பவம் கிளிநொச்சியில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

கிளிநொச்சி அக்கராயன் வீதியிலுள்ள காப்புக்காடு பகுதியில் மணற் கடத்தல் இடம்பெறுவதாகக் கிடைத்த தகவலையடுத்து கிளிநொச்சிப் பிரதேச குற்றப் புலனாய்வுப் பிரிவினர் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். அங்கு சட்டவிரோதமாக மணலகழ்வில் ஈடுபட்ட டிப்பர் வாகனத்துடன் சாரதியைக் கைது செய்து கிளிநொச்சி பொலிஸ் நிலையம் அழைத்து வந்தனர்.

வரும்வேளையில் மற்றொரு டிப்பர் வாகனத்துடன் வந்த 6 பேர் கொண்ட கும்பலொன்று அவர்களை வழிமறித்துள்ளது. இதன்போது சிவில் உடையில் பொலிஸார் இருந்தமையால், தம்மைப் பொலிஸ் என அடையாளப்படுத்தினர். ஆயினும் அவர்களின் அடையாள அட்டையைத் தூக்கி எறிந்த கும்பல், சந்தேகநபருடன் டிப்பர் வாகனத்தையும் கடத்திச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் சந்தேகநபர்களைக் கைதுசெய்ய கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முடுக்கிவிட்டுள்ளனர். (ச-இ)

# முல்லை மாவட்டத்தில் அபிவிருத்திப் பணிகள்

## ஜனாதிபதி ஏற்பாடு

முல்லைத்தீவு, ஜூன் 24

முல்லைத்தீவு மாவட்டத்தில் உல்லாசப் பயணங்களை விருத்தி செய்வதற்கான திட்டத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுக்கவுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்வரும் ஜூலை மாத முதல் வாரத்தில் முல்லைத்தீவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செல்லவுள்ளார்.

அங்கு முல்லைத்தீவு மக்களுக்கான பல்வேறு அபிவிருத்திப் பணிகள் மற்றும் பொழுதுபோக்கு மையங்களின் திருத்தப்பணிகளுக்கான செயற்திட்டங்களுக்கு ஜனாதிபதி நிதியொதுக்கீடு செய்யவுள்ளார் என ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-19)



# கமநல உதவி ஆணையாளராக தெய்வநாயகி கடமையேற்பு

யாழ்ப்பாணம், ஜூன் 24

யாழ்.மாவட்ட கமநல உதவி ஆணையாளராக தெய்வநாயகி பிரணவன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் யாழ். மாவட்டத்திலுள்ள அலுவலகத்தில் தனது கடமைகளை நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை உத்தியோகபூர்வமாகப் பொறுப்பேற்றார்.

இதுவரை காலமும் யாழ். மாவட்ட கமநலசேவைகள் உதவி ஆணையாளராகக் கடமையாற்றிய எஸ்.நிஷாந்தன், ஜனாதிபதி செயலக உணவுத் திட்ட ஒத்துழைப்புக்கான கூட்டாண்மை செயலகத்தின் பணிப்பாளராக பதவியேற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-ரி-125)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## யாழில் தினசரி 200 விதிமீறல்:

# போக்குவரத்து விதிகளைப் பேணி விபத்துகளை தவிர்க்குக



### யாழ். சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அறிவுறுத்து

**யாழ்ப்பாணம், ஜூன் 24**

**யாழ்.மாவட்டத்தில் தினசரி சராசரி 200 க்கும் மேற்பட்ட போக்குவரத்து விதிமுறை மீறல்கள் பதிவாகி வருகின்றன. பொதுமக்கள் போக்குவரத்து விதிகளைப் பின்பற்றினால் அதிகளவில் விபத்துகளைத் தவிர்க்கமுடியும் என யாழ்.மாவட்ட சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மஞ்சுள செனரத் அறிவுறுத்தியுள்ளார்.**

மேலும் தெரிவிக்கையில், யாழ்ப்பாண மாவட்டத்தில் தினமும் அதிகளவான போக்குவரத்து விதிமுறை மீறல்கள் இடம்பெறுகின்றன.

வாகனங்களை நிறுத்தத் தடை செய்யப்பட்ட இடங்களில் வாகனங்களை நிறுத்துதல் போன்ற போக்குவரத்து விதி மீறல்கள் தினமும் பதிவாகின்றன. நேற்றுமுன்தினம் மாத்திரம் யாழ்.மாவட்ட பிராந்தியத்தில் 140 பேரும் காங்கேசன்துறை பிராந்தியத்தில் 60 பேருமாக 200 பேர் வரையில் போக்கு வரத்து விதிமீறலுக்காக சட்டநடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் போக்குவரத்துச் சட்டங்களை மீறாது உரிய நடைமுறைகளைப் பின்பற்றி பயணித்தால் விபத்துக்களைத் தவிர்த்துக்கொள்ளமுடியும்.

தலைக்கவசம் அணிதல், மோட்டார் சைக்கிளில் பயணிக்கும்போது தொலைபேசி பாவனையைத் தவிர்த்த[illegible] என்பன கட்டாயம் க[illegible] பிடிக்கவேண்டும்.

இதுதொடர்பில் பொலிஸ[illegible] விழிப்புணர்வு விசேட [illegible]றிட்டங்கள் இடம்பெறுகின்றன- என்றார். (ச-26)

## கசிப்புடன் சிறுவன் ஊரெழுவில் கைது

ஊரெழு மேற்குப் பகுதியில் வீட்டின் முன்புறமாக கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் 17 வயதான சிறுவன் கைதுசெய்யப்பட்டுள்ளார். கோப்பாய் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை இந்தக் கைது இடம்பெற்றது.

சந்தேகநபரின் வீட்டின் முன்பக்கக் காணிக்குள் பதுக்கி வைக்கப்பட்ட நிலையில் 3 ஆயிரத்து 750 மில்லிலீற்றர் கசிப்பு மீட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச-ரி3-125)

## வேலைவாய்ப்பு வழங்குவதாக 9 லட்சம் ரூபா பணம் மோசடி!

### சந்தேகநபரொருவர் கைது

வேலைவாய்ப்பு வழங்குவதாகத் தெரிவித்து ஒன்பது லட்சம் ரூபா பணத்தை மோசடிசெய்த 47 வயதான சந்தேகநபர் ஒருவர், யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸாரால் நீர்கொழும்பில் வைத்து நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதுகுறித்து மேலும் தெரியவருவதாவது:-

சந்தேகநபர், முகநூலில் வேலைவாய்ப்பு வழங்குவதாகத் தெரிவித்து விளம்பரங்களை இட்டு குறித்த முகநூலினூடாக விண்ணப்பிப்பவர்களை குழுவாக மாற்றி, முதலில் சிறுபணத்தொகையினை அவர்களிடம் இருந்து பெற்றுள்ளார். பின்னர் அதை இரட்டிப்பாக வழங்கி அவர்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளார். அதன்பின்னர் பெருமளவு தொகைப் பணத்தை அவர்களிடமிருந்து பெற்று பின்னர் அதைத் திருப்பிக்கொடுக்காது தொடர்புகளைத் துண்டித்து வந்துள்ளார்.

நாவாந்துறையைச் சேர்ந்த இளைஞர் ஒருவரும் இவ்வாறு சிறுதொகைப் பணத்தை ஆரம்பத்தில் வழங்கி இரட்டிப்பாக அதைப் பெற்ற பின்னர், 9 லட்சத்து ஆயிரம் ரூபா பணத்தை தனியார் வங்கியூடாக வழங்கியுள்ளார். தனக்கு இரட்டிப்புப் பணம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் அவர் இருந்தபோது சந்தேகநபர் அவருடனான தொடர்புகளைத் துண்டித்துள்ளார். இதையடுத்து அந்த இளைஞர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நடந்தவற்றைக்கூறி முறைப்பாடு பதிவுசெய்துள்ளார்.

முறைப்பாட்டுக்கு அமைய, யாழ்ப்பாணம் பொலிஸ் தலைமையகப் பொறுப்பதிகாரி சமில பளிகேனவின் வழிநடத்தலில், குற்றத்தடுப்பு பொலிஸ் பரிசோதகர் ஹேவா வசந்தின் நெறிப்படுத்தலில், யாழ். குற்றத்தடுப்பு உபபொலிஸ் பரிசோதகர் இந்திக்க அபய குணசேகர தலைமையிலான அணியினர் முன்னெடுத்த நடவடிக்கைகளின் அடிப்படையில் சந்தேகநபர் நீர்கொழும்பில் வைத்து நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்டார். (அ-ம-125)


## ரிங்கர் (Tinker) தேவை

வாகன ரிங்கர் வேலையில் நன்கு அனுபவம் உள்ள ரிங்கர் தேவை. தொடர்பு கொள்ளவும்.



தொடர்புகட்கு: 077 8389 309





வெளிநாடுகளில 'சிம்' வித்து சிம்பிளா பணக்காரராக எங்கட யாழ்ப்பாணத்துக்காரர் சிலர் மாறினவை. இந்த 'சிம்' கொம்பனியள், இயக்கத்தின்ரதான் எண்டும், பினாமியளை வைச்சு இயக்கம் நடத்துது எண்டும் முந்திக் கதை வந்தது. ஆனால் முள்ளி வாய்க்காலோட எல்லாக் கதையும் அடங்கிப்போக, இந்த 'சிம்' கொம்பனிக்காரர் பெரும் பணக்காரரா கிட்டினம். விண்வெளிக்கு ஒரு நாய் தான் முதன் முதலா அனுப்பட்ட உயிரினம். அந்த நாயின்ர பெயருள்ள கொம்பனிதான் இப்பிடி 'சிம்' வித்து வெளிநாட்டில பணத்தின்ர உச்சிக்குப் போனது.

ஒருகட்டத்தில 'சிம்' பிஸ்னஸோட, இந்தியாவில படமெல்லாம் எடுக்கிற அளவுக்கு அவை உயர்ந்திட்டினம். ஆனால் தெரியாத்தனமா அவை மஹிந்தவோட போட்டோ எடுத்ததால, அவைக்கும் மஹிந்தவுக்கும் தொடர்பு எண்டு கதைபரவ, அது தமிழகத்தில நெருப்பா எரிஞ்சு, அவை எடுத்த படத்தை ஓடவிடமாட்டம் எண்டு பெரும் போராட்டமெல்லாம் முந்தி நடந்தது. புலி தான் பசிச்சாலும் புல்லைத் தின்னாது. கழுதையள் கண்டதையும் தின்னும் தானே. அதால ஆ[illegible]ல்லாம் போராட்டம் நடத்திச்சினமோ, அ[illegible]ய இப்ப தங்கதட்டில ஆலாத்தி எடுத்து, இந்த '[illegible]' கொம்பனிக்காரரைக் கொண்டா[illegible] கொண்டிருக்கினம்.

இந்த நிலைமையிலதான், கிட்டடியில வாழ்வ[illegible]தாரம் இல்லாத முன்னாள் போராளியள் கொஞ்சப் பேருக்கு ஆளுக்கு 25 லட்சப் படி அந்த 'சிம்' கொம்பனி முதலாளி குடுத்தவர். கிள்ளித் தெளிக்காமல் இப்பிடி அள்ளிக் குடுக்கிறதுக்கும் பெரிய மனம் வேணும். அதை அவர் செயலில காட்டியிருக்கிறார். ஒரு பெரிய யாவாரம் படிஞ்சதாலதான் அந்தச் சந்தோசத்தில இப்பிடி அவர் உதவி செய்திருக்கிறார் எண்டும் ஒரு கதை. ரெலிக்கொம் தான் இலங்கையின்ர தொலைத்தொடர்புக்கு முள்ளந்தண்டு. அதை இப்ப இந்தப் புலம்பெயர் 'சிம்' கொம்பனி பெருந்தொகைக்கு வாங்கப்போகுது. அரசாங்கமும் அதுக்கு ஓமெண்டிட்டு. ஆனால் விசயத்தை ரகசியமா வைச்சிருக்குது. எண்டாலும் ஏதோ ஒருவகையில அது லீக் ஆகிட்டுது. அதாலதான் நாடு பட்டினியில செத்தாலும் ரெலிக்கொம்மை விக்கக்கூடாது 'விசர்வன்ஸ' மாதிரி ஆக்கள் கத்துகினம்.

ஆனால் ரணில் உதையெல்லாம் கேக்கிற ஆளில்லை. இவையள் ஒருபக்கம் கத்த, லண்டனுக்குப் போன ரணில், அந்த 'சிம்' முதலாளியோட நிண்டு படமெடுத்து அத வெளியில விட்டிருக்கிறார். அப்ப இனி ரெலிக்கொம் தமிழரின்ர கையில வரப்போகுது. அதுமட்டும் காணாது. அதில வாழ்வாதாரம் இல்லாமல் இருக்கிற முன்னாள் போராளியளுக்கு வாழ்வு குடுத்தால் இன்னும் சிறப்பு. ஏனெண்டால் போராளியள் கனபேர் இந்தத் தொலைத்தொடர்பு விசயங்களில கில்லாடியள். அப்பிடியானவைக்கு ரெலிக்கொம்மில வேலை குடுத்தால், அவையின்ர திறமையை அந்த சிம் கொம்பனி பயன்படுத்தினமாதிரியும் போடும், அவைக்கு வாழ்வு கிடைச்ச மாதிரியும் போடும்.



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மாயமான 'ரைட்டன்' நீர்மூழ்கி

# வெடித்துச் சிதறிய பாகங்கள் மீட்பு!



அமெரிக்கா அறிவிப்பு

**வொஷிங்டன், ஜூன் 24**

**டைட்டானிக் கப்பலைப் பார்வையிட 5 பேருடன் சென்று மாயமான 'ரைட்டன்' எனும் நீர்மூழ்கிக் கப்பல் வெடித்துச் சிதறியிருக்கலாம் என அமெரிக்கக் கடற்படை தெரிவித்துள்ளது. அதாவது மிகை அழுத்தத்தின் காரணமாக நீர்மூழ்கிக் கப்பல் வெடித்து 5 பேரும் உயிரிழந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.**

1912ஆம் ஆண்டு பனிப்பாறையில் மோதி டைட்டானிக் கப்பல் விபத்துக்குள்ளாகி மூழ்கியது.


அட்லாண்டிக் கடலில் 12,500 அடி ஆழத்தில் மூழ்கி சிதைந்து கிடக்கும் டைட்டானிக் கப்பலை பார்வையிடுவதற்காக அதிநவீன நீர்மூழ்கிக் கப்பலில் ஒருவருக்கு தலா 2 கோடி ரூபா வீதம் கொடுத்து 5 சுற்றுலாப் பயணிகள் பயணத்தை மேற்கொண்டனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை பயணத்தைத் தொடங்கிய இந்த நீர்மூழ்கிக் கப்பல், ஒரு மணிநேரம் 45 நிமிடங்களில் தொடர்புகளிலிருந்து மாயமானது.

இந்த நீர்மூழ்கிக் கப்பலில் அதிநவீன வசதிகள் செய்யப்பட்டுள்ளதால் அதன் தொடர்பு அற்றுப்போவதற்கு வாய்ப்பே இல்லை என அதனை வடிவமைத்த நிறுவனம் கூறியுள்ளது.

அமெரிக்கா, கனடா நாடுகள் இணைந்து முழுவீச்சில் நீர்மூழ்கிக் கப்பலைத் தீவிரமாகத் தேடிவந்தன.

இந்தநிலையில் நீர்மூழ்கிக் கப்பலின் சிதைவுகள் எனச் சந்தேகிக்கப்படும் பாகங்கள் சில அடையாளம் காணப்பட்டுள்ளதாக அமெரிக்க கடற்படை அறிவித்துள்ளது. இதனால், கப்பலில் பயணம் செய்த 5 பேரும் உயிரிழந்திருக்கலாம் என நம்பப்படுகிறது. (ச-இ)



### 'ரைட்டன்' நீர்மூழ்கி விபத்தை

## அன்றே கணித்த 'தி சிம்ப்ஸன்ஸ்'

வொஷிங்டன், ஜூன் 24

'டைட்டானிக்' கப்பலை பார்வையிடச் சென்ற 'டைட்டன்' நீர்மூழ்கிக் கப்பல் விபத்துக்குள்ளானமை குறித்து 17 ஆண்டுகளுக்கு முன்பே அமெரிக்காவில் பிரபலமான 'தி சிம்ப்ஸன்ஸ்' எனும் கார்ட்டூன் தொடரில் காட்டப்பட்டுள்ளதாக இணையத்தளத்தில் வைரலாகி வருகின்றது.

111 ஆண்டுகளுக்கு முன் கடலில் மூழ்கிய டைட்டானிக் கப்பலைப் பார்வையிட கடந்த ஞாயிற்றுக்கிழமை புறப்பட்டுச் சென்ற 'ரைட்டன்' நீர்மூழ்கி வெடித்துச் சிதறியதில் அதில் இருந்த 5 பேரும் உயிரிழந்து விட்டதாக அமெரிக்கக் கடற்படை அறிவித்துள்ளது.

இந்தநிலையில் இந்த விபத்து குறித்து முன்பே அமெரிக்காவில் பிரபலமான 'தி சிம்ப்ஸன்ஸ்' கார்ட்டூன் தொடரில் காட்டப்பட்டுள்ளது. 2006ஆம் ஆண்டு வெளியான இந்தத் தொடரின் 17ஆவது சீசனில் இந்தச் சம்பவம் எடுக்கப்பட்டுள்ளது.

அதாவது நீரில் மூழ்கிய கப்பலில் இருக்கும் பொக்கிஷங்களை எடுப்பதற்காக நாயகன் தனது தந்தையுடன் நீர்மூழ்கிக் கப்பலில் பயணிக்கிறார். பவளப் பாறையில் மோதி மாட்டிக்கொள்வது போல் அதில் காட்டப்பட்டுள்ளது.

இந்த நீர்மூழ்கிக் கப்பல் பயணத்திலும் பாகிஸ்தானிலிருந்து தந்தை மற்றும் மகன் பயணம் செய்துள்ளனர். அதற்கமைய இந்த விபத்தை 'சிம்ப்ஸன்ஸ்' தொடருடன் ஒப்பிட்டு தங்கள் கருத்துகளைப் பகிர்ந்து வருகின்றனர் நெட்டிசன்கள்.

அதேவேளை கொரோனா வைரஸ் தொடங்கி உக்ரைன் போர் வரை ஏராளமான விடயங்கள் ஆச்சரியமூட்டும் வகையில் 'தி சிம்ப்ஸன்ஸ்' தொடரில் காட்டப்பட்டுள்ளன. இவை அனைத்தும் எதேச்சையாக நடந்தனவா? அல்லது திட்டமிட்டு எடுக்கப்பட்டவையா? என்று தொடர்ந்து இணையத்தில் விவாதங்கள் நடைபெற்று வருகின்றன. (ச-இ)

## திறப்பு விழா

யாழ்ப்பாணம், ஜூன் 24

'மொனிக் இன்ரநஷனலின்' யாழ்ப்பாணக் கிளையின் திறப்பு விழா இன்று முற்பகல் 10 மணிக்கு இல. 86 பொன்னம்பலம் வீதியில் இடம்பெறவுள்ளது. (ஒ-இ)

## யாழில் செவ்வாயன்று வர்த்தகக் கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூன் 24

மக்கள் வங்கியின் ஏற்பாட்டில் வர்த்தகக் கண்காட்சி எதிர்வரும் 27ஆம் திகதி யாழ்.வீரசிங்கம் மண்டபவளாகத்தில் காலை 9 மணிமுதல் மாலை 4 மணிவரையில் இடம்பெறவுள்ளது.

உலக நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தர முயற்சியாளர்களின் தினத்தையொட்டி இந்த வர்த்தகக் கண்காட்சி நடத்தப்படவுள்ளது.

கண்காட்சியில் தளபாட உற்பத்திகள், கற்றாழை உற்பத்திகள், சலவை உற்பத்திகள், தோல்சார் உற்பத்திப் பொருள்கள், பனைசார் கைவினை உற்பத்திகள், கடல்சார் உலர் உணவுப் பொருள்கள், ஆடை உற்பத்திகள், உணவுப் பொருள்கள் என்பன காட்சிப்படுத்தப்படவுள்ளன என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச)

## நிர்வாகக் கூட்டம்

கொடிகாமம் ஜூன் 24

அகில இலங்கை காந்தி சேவா சங்கத்தின் நிர்வாக சபைக்கூட்டம் தலைவர் சோ.க.தம்பிப்பிள்ளை தலைமையில் இன்று 24ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிளிநொச்சி காந்தி நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ய-159)

## சதாசகாய அன்னை பெருவிழா ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூன் 24

மல்லாகம் புனித சதாசகாய அன்னையின் வருடாந்தத் திருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் குருதிக்கொடை முகாமும் இடம்பெறும் என்றும் கொடையாளர்கள் பங்கேற்று குருதிக் கொடையளிக்குமாறும் ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகள் இழுபறியாகும். பிள்ளைகளின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும். வீண் செலவுகள் குறையும்.

**இடபம்:** மனதில் சிறுசிறு குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதில் பொறுமை அவசியம். சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** உற்சாகமாகவும் பரபரப்பாகவும் செயற்படுவீர்கள். நினைத்த காரியத்தை நினைத்தபடி முடிப்பீர்கள். மனவருத்தங்கள் நீங்கும். செலவுகளைச் சமாளிப்பதில் சிரமம் இருக்காது.

**கடகம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே ஈடுபடவும். எதிர்பாராத செலவுகளைச் சமாளிப்பீர்கள். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. வீண்மனஸ்தாபம் ஏற்படக்கூடும்.

**சிம்மம்:** அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். காரியங்களில் பொறுமை மிக அவசியம். அதிகரிக்கும் செலவுகளால் கையிருப்புக் கரையும். சிலருக்குக் கடன் வாங்கக்கூடிய சூழ்நிலையும் ஏற்படும்.

**கன்னி:** செலவுகள் அதிகரிக்கும் நாள். என்றாலும் தேவையான பணம் இருப்பதால் சமாளிப்பதில் சிரமம் இருக்காது. மகிழ்ச்சி தரும் செய்தி கிடைக்க வாய்ப்பு உள்ளது. ஆதாயம் கிடைக்கும்.

**துலாம்:** காரியம் அனுகூலமாக முடியும். சுபநிகழ்ச்சிக்கான பேச்சு சாதகமாகும். புதிய முயற்சி வெற்றிகரமாக நிறைவேறும். மனஇறுக்கம் நீங்கி நிம்மதி உண்டாகும்.

**விருச்சிகம்** - பதற்றம் இல்லாமல் செயற்படவேண்டிய நாள். தந்தையுடன் வீண் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**தனுசு:** புதிய முயற்சிகளைக் கண்டிப்பாகத் தவிர்த்துவிடவும். சற்று சோர்வு கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும் என்பதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.

**மகரம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கருத்துவேறுபாடு நீங்கும். எதிர்பார்த்த காரியம் அனுகூலமாக முடியும். வியாபாரத்தில் லாபம் கூடுதலாகக் கிடைக்கும்.

**கும்பம்:** எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். சகோதரர்கள் மூலம் ஆதாயம் உண்டாகும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**மீனம்:** தெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றும் வாய்ப்பு ஏற்படும். அன்பும் ஆதரவும் மனதுக்கு உற்சாகம் தரும். புதிய முயற்சிகளில் யோசித்து ஈடுபடுவது நல்லது.

## கொடியேற்றம்

கொடிகாமம், ஜூன் 24

விடத்தற்பளை சம்பாவெளி அருள்மிகு வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 10 நாள்கள் இடம்பெறவுள்ளது.

எதிர்வரும் முதலாம் திகதி சனிக்கிழமை சப்பறத் திருவிழாவும், மறுநாள் ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும் என ஆலய பரிபாலனசபை அறிவித்துள்ளது. (ச-ரி3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏனிந்தப் பொய்முகம்?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க லண்டனில் வைத்து கனடாவின் முன்னாள் பிரதமரும் சர்வதேச ஜனநாயக ஒன்றியத்தின் தலைவருமான ஸ்ரீபன் ஹூப்பருக்கு வழங்கிய கேள்வி – பதில் நிகழ்ச்சியில் பல்வேறு விடயங்களைத் தெரிவித்திருக்கின்றார். அவர் கூறிய விடயங்களைப் பார்க்கும் போது இலங்கையில் ஒப்புக்குச்சப்பாணியாக – பெயரளவில் நடக்கும் விடயங்களை சர்வதேசத்தின் முன் பெரும் எடுப்பில் காண்பித்து தப்பிக்கும் போக்கை ரணில் கடைப்பிடிக்கின்றார் என்பது அப்பட்டமாகத் தெரிகின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் எந்தவொரு முன்னேற்றமும் இல்லாத பேச்சை நடத்திக் கொண்டு அதை ஒரு மிகப் பெரிய சாதனையாகவும் பட்டியலிட்டிருக்கின்றார். ஜனாதிபதி ரணில் இவ்வாறுதான் நடந்து கொள்வார் என்று எச்சரிக்கை விடுத்து அந்தச் சந்திப்பை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தவிர்த்திருந்தது.

லண்டனில் நடந்த நிகழ்வில், ''நல்லிணக்கத்துக்கான செயன்முறையை நான் பிரதமராக இருந்தபோது (நல்லாட்சி அரசின் காலம்) தொடங்கினேன். நான் முடிந்த இடத்திலிருந்து தொடர்கின்றேன். தமிழ்ப் பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் நான் பேசுகின்றேன். அவர்களுடன் பல முக்கியமான விடயங்களில் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளோம். உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான சட்டவரைவு உருவாக்கப்பட்டுள்ளது. பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவு நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வடக்கு – கிழக்கில் உள்ள காணிப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தில் காணாமல் ஆக்கப்பட்டோர் பணிமனை ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுத்து வருகின்றது. நாங்கள் அரைவாசிப் பிரச்சினைகளைக் கடந்து விட்டோம். இறுதியாக அதிகாரங்களைப் பகிர்வது குறித்து நான் தமிழ்க் கட்சிகளுக்கு சாத்தியமான தீர்வுகளை முன்வைத்துள்ளேன். தேவையான சட்டநடைமுறைகளுக்கு அமைய கால அவகாசத்தை ஒப்புக்கொண்டு ஜூலை மாத இறுதிக்குள் ஒரு விரிவான செயன்முறையை முன்வைக்க எதிர்பார்க்கின்றேன்'' என்று ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேச்சு நடத்தி பல முக்கியமான விடயங்களில் இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளோம் என்று ஜனாதிபதி குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால், ஜனாதிபதியுடன் சந்திப்பில் பங்கேற்ற இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் பேச்சு திருப்தியில்லை என்று குறிப்பிட்டிருந்தார். அதில் பங்கேற்ற ஏனைய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பேச்சுகளில் இணங்கிய விடயங்கள் செயற்படுத்தப்படவில்லை என்று அடுத்தடுத்த கட்டப் பேச்சுக்களைப் புறக்கணித்திருந்தனர். ஆனால், முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைப்பதுபோல ரணில் விக்கிரமசிங்க பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டிருக்கின்றது என்கிறார்.

நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பான சட்டவரைவு உருவாக்கப்பட்டுள்ளதாக ரணில் குறிப்பிட்டிருந்தார். ஆனால், இந்த ஆணைக்குழு தொடர்பில் ஆரம்பத்திலிருந்தே தமிழ்த் தேசியக் கட்சிகள் அனைத்தும் எதிர்ப்பு வெளியிட்டிருந்தன. அரசாங்கத்தின் இந்தப் பம்மாத்தை ஏற்கமுடியாது என்று அவை பகிரங்கமாகக் கருத்து வெளியிட்டிருந்தன. அதைப் போலத்தான், நடைமுறையிலுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவேண்டும் என்றும் பயங்கரவாத எதிர்ப்புச் சட்டவரைவை எதிர்ப்பதாகவும் தமிழ்க் கட்சிகள் குறிப்பிட்டிருந்தன. ஆனால், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவை இரண்டையும் ஆக்கபூர்வமான நடவடிக்கையாகக் குறிப்பிட்டு லண்டனில் கருத்துத் தெரிவித்திருக்கின்றார். தமிழ்த் தரப்புகள் ஏற்றுக்கொள்ளாதவைதான் இலங்கையின் ஆக்கபூர்வமான நல்லிணக்கமா?

அதிகாரங்களைப் பகிர்வது குறித்து நான் தமிழ்க் கட்சிகளுக்குச் சாத்தியமான தீர்வுகளை முன்வைத்துள்ளேன் என்று ரணில் குறிப்பிட்டுள்ளார். மாகாணசபை தொடர்பில் முன்வைத்துள்ள இடைக்கால யோசனைதான் அவரது தீர்வா? இதனையும் தமிழ்த் தரப்பில் விக்னேஸ்வரனைத் தவிர ஏனையோர் எதிர்த்துள்ளனர். அப்படியானால் இது எப்படி தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளும் தீர்வு யோசனையாக அமையும்?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பித்தலாட்டத்தை சர்வதேச சமூகத்தின் முன் தோலுரித்துக்காட்டவேண்டியது தமிழர் தரப்பின் கடமை. இல்லையேல் ரணில் கூறுவதையே உண்மை என்று சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளும் அபாயமும் இருக்கின்றது.

### நாளொரு நல்வார்த்தை

"கோபப்பட வேண்டிய இடத்திலும் எவன் ஒருவன் பொறுமையைக் கடைப்பிடிக்கிறானோ அவனே உண்மையான வெற்றியாளன்" – புத்தர்



# உள்ளூர்க் கடன்சீரமைப்பு மக்களைப் பாதிக்கும்!

## பொருளாதாரப் பேராசிரியர் எச்சரிப்பு



**கொழும்பு, ஜூன் 24**

**நாட்டின் உள்ளூர்க் கடனை மறுசீரமைப்பது, சமூக பொருளாதாரத் தாக்கத்தை ஏற்படுத்தும் என பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதாரப்பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

அவர் மேலும் கூறுகையில்;

இலங்கையின் மொத்தக் கடன் தொகை கிட்டத்தட்ட 92 பில்லியன் டொலர். அதில் 47 பில்லியன் டொலர் உள்நாட்டுக் கடனாகவும், 36 பில்லியன் டொலர் வெளிநாட்டுக் கடனாகவும் உள்ளன. அரசாங்கமும் மத்திய வங்கியும் உள்நாட்டுக் கடனை ஏதாவது ஒரு வழியில் விரைவில் மறுசீரமைக்க நடவடிக்கை எடுத்துள்ளன.

உள்ளூர்க் கடனை மறுசீரமைப்பால் சமூகத்தில் சமூக பொருளாதாரப் பாதிப்பு கண்டிப்பாக ஏற்படும். அதனால் நாட்டின் பொருளாதாரம் சுருங்கும். இவை கடுமையான முறையில் பாதிக்க வாய்ப்புள்ளது - என்றார். (ச-இ)



# பணவீக்கம் வீழ்ச்சி

கொழும்பு, ஜூன் 24

நாடளாவியரீதியில் பணவீக்கம் கடந்த ஏப்ரல் மாதம் 33.6 சதவீதமாக பதிவாகியிருந்த நிலையில் மே மாதம் 22.1 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

பணவீக்க வீழ்ச்சிக்கு கடந்த ஏப்ரல் மாதத்துடன் ஒப்பிடுகையில் மே மாதத்தில் உணவு மற்றும் உணவற்ற பொருள்களின் விலைகள் கட்டணங்களில் ஏற்பட்ட வீழ்ச்சியே மிகப் பிரதான காரணமாக அமைந்துள்ளது. (ஒ-ரி)

*அரச ஊழியர்களுக்கான*

# மருத்துவக் காப்புறுதி திங்களில் முறையிடுக

கொழும்பு, ஜூன் 24

அரச ஊழியர்களுக்கான மருத்துவக் காப்புறுதி தொடர்பான முறைப்பாடுகளை திங்கட்கிழமைகளில் சமர்ப்பிக்கலாம் என தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியம் தெரிவித்துள்ளது.

நிதியத்தின் தலைவி சட்டத்தரணி சாகல அபயவிக்கிரம தெரிவிக்கையில்;

திங்கட்கிழமை பொதுமக்கள் தினமாக நாம் பிரகடனப்படுத்தியுள்ளோம்.

அலுவலகத்துக்கு நேரில் வரமுடியாதவர்கள் திங்கட்கிழமைகளில் 0773646900 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொள்ளமுடியும்.

தற்போது மருத்துவக் காப்புறுதி தாமதம் தொடர்பாக ஆயிரத்து 500 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. இவற்றில் 750 முறைப்பாடுகள் பற்றி ஆராய்ந்து வருகின்றோம் - என்றார். (ச-6-ரி3)

**நாளை** 25.06.2023 ஞாயிற்றுக்கிழமை ஆனி 10

சுபநேரம் : 08.55 - 10.25

ராகுகாலம் : 04.25 - 05.55

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மயக்கமருந்து சிகிச்சை

# நால்வரின் உயிரிழப்பு விசாரணை ஆரம்பம்

சத்திரசிகிச்சையின்போது, இரண்டு சிறுவர்கள் உள்ளிட்ட 4 பேர் உயிரிழந்தமை தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

விசாரணைகளுக்காக பேராதனை போதனா மற்றும் பேராதனை பண்டார நாயக்க சிறுவர் மருத்துவமனைகளின் பணிப்பாளர்கள் சுகாதார அமைச்சுக்கு அழைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

குறித்த மருத்துவமனைகளில் சத்திர சிகிச்சைகளின் போது இந்தியத் தயாரிப்பு மயக்க மருந்து பயன்பாட்டால் சிறுவர் உட்பட 4 பேர் உயிரிழந்துள்ளமையை அடிப்படையாகக் கொண்டே விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆயினும் குறித்த மரணங்கள் மயக்க மருந்தால் ஏற்பட்டதாக இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை. அதற்குரிய விசாரணைகள் அவசியம்.

அதற்கமைய சத்திரசிகிச்சை மேற்கொண்டவிதம்மற்றும் பயன்படுத்தப்பட்ட மருந்துகள் குறித்தும் விசாரணை நடத்தப்படவுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

(ச-ரி3-இ)

# நவாலியில் வாள்களுடன் ஒருவர் கைது!

மானிப்பாய் நவாலி வடக்குப் பகுதியில் வாள்களுடன் பயணித்த ஒருவர் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாய் பொலிஸ் குற்றத்தடுப்புப் பிரிவினரால் இந்தக் கைது இடம்பெற்றுள்ளது.

40 வயதுடைய சந்தேகநபரே 2 வாள்களை எடுத்துச்சென்றபோது கைதுசெய்யப்பட்டுள்ளார்.

(ச-ரி-27)


## கிடுகு வழங்குநர்களுக்கான கூறுவிலை கோரல்

ஆனையிறவு உப்பளத்துக்கு சுமார் 30,000 கிடுகுகள் (07 அடி நீளம் 10 அங்குல அகலம்) வழங்குவதற்கான மூடப்பட்ட கூறுவிலை கோரப்படுகின்றது. மாதமொன்றுக்கு சராசரியாக 10,000 கிடுகுகள் விநியோகிக்கக் கூடியவர்கள் 12.07.2023 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பப் படிவத்தையும் மேலதி தகவல்களையும் **021 320 4556, 074 202 3334** என்ற தொலைபேசி ஊடாகவும் nationalepass@gmail.com என்ற மின்னஞ்சல் ஊடாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

முகாமையாளர்,
ஆனையிறவு உப்பளம்
A9 வீதி, ஆனையிறவு

(CR/40197) AH-1



## யாழ் YSF

## 'Youth Speak Forum' 2023

24 JUNE

Saturday
9 am - 1 pm
கூவர் அரங்கு, மருத்துவபீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

பேச்சாளர்கள்

PROF.கி.சி.சிறிசற்குணராஜா DR.ஸ்ரீபவன் கணேசமூர்த்தி MR. கஜன் சுகுமாரன்
DR.த.சத்தியமூர்த்தி MR.அன்பழகன் பவுல்

உதயன் Youth speak AIESEC


## 31ம் நாள் துயரலைகள்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 30 | 25 |
| 09 | 05 |
| 1985 | 2023 |

## Dr. வேல் சாரங்கன்

குறிப்பறிந்து அரவணைத்து ஆதரிக்க என்றும்
மறுக்காத பெற்றோர், உடன் பிறப்புக்கள் மற்றும்

போற்றுகின்ற மனைவி, உறவினர் எனப்பலர்
மாற்றமின்றி உன்னுடன் பெரிதும் உடனிருக்க


ஞாலத்தில் பகையோ, எதிர்ப்போ ஏதுமின்றி
மேலோனாய் நீடு வாழ இடமிருந்தும் விதி வழியில்

சடுதியிலே நோயினால் வீழ்ந்து மறைந்தாயே, எம்மையெல்லாம்
முடிவில்லாத்துயரத்தில் ஆழ்த்தி அகன்றாயே.

உன் பிரிவின் துயரம் எம்நெஞ்சில் எரியும் பெரு நெருப்பு.
சாந்தி, சாந்தி, சாந்தி

சித்தப்பா மற்றும் குடும்பத்தார் தெஹிவளை

## 45ஆம் நாள் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த (14.05.2023) ஞாயிற்றுக்கிழமை இறைபதமடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

அமரர்

### குலசிங்கம் கிருபாகரன்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை (25.06.2023) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் ஓட்டங்குளம் பாலியாற்றிலும், வீட்டுக்கிருத்திய சபிண்டீகரண கிரியைகள் 27.06.2023 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இல.60, சந்தை வீதி,
செபஸ்தியார் கோயிலடி,
அனிஞ்சியன்குளம், மல்லாவி.

குடும்பத்தினர்.
077 080 2160, 077 371 3936

(CS 25332) A-1

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த (26.05.2023) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர் சின்னத்துரை குஞ்சுமணி (மணி)



அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (23.06.2023) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது.

அன்னாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (25.06.2023) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர்.

கச்சாய் தெற்கு, கொடிகாமம்.
T.P: 077 3397 390

(CR 40205) A-1

## 31ஆம் நாள் ஞாபகார்த்த நன்றி ஆராதனை



கடந்த (26.05.2023) வெள்ளிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்த எங்கள் அன்புத் தெய்வம்

### அமரர் தேவராசா விஜயலட்சுமி

(தேவராசா போதகர் அம்மா)

அவர்களின் வாழ்விற்கான நன்றி ஆராதனை நாளை (25.06.2023) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து நன்றி ஆராதனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அருட்பணி தேவராசா போதகர்,
பிள்ளைகள்.
077 540 9277
A9 வீதி, மாங்குளம்.

(CS/50978) AH-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடைமையில் ஆமை: காரைநகர்வாசி கைது

காரைநகர், ஜூன் 24

காரைநகர், ஊரிப் பகுதியில் இறந்த ஆமையை வைத்திருந்த குற்றச்சாட்டில் முதியவர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலுக்கமைய குறித்த நபர் கைதுசெய்யப்பட்டார். (ச–ரி3-125)


**வேலையாட்கள் தேவை**

சாவகச்சேரியில் இயங்கும் கூல்பார் ஒன்றுக்கு வேலையாட்கள் தேவை.

தொடர்பு: 075 130 6392


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 14 - 02 - 1966

விண்ணில் 05 - 07 - 2022



### அமரர் பாஸ்கரன் கமலாம்பாள்

திதி: ஆனி பூர்வ பக்க சஷ்டி

**என் தாயவள்**

கருத்தாங்கி என்னை கரங்களில் ஏந்தி கனவுகளுடன் பெயர் சூட்டி மகிழ்ந்த என் மாதா சிரம் தாழ்ந்து என் கவலைகள் கண்ணீர் சுரக்க மார்புடன் என்னை வருடி மனதில் அவள் முகம் பதித்தாள். அன்பின் எல்லாமாய் உயிர் தந்த உருவமாய் உதிரத்தின் உறவாய் என் அன்னையின் அன்பினில் வளர்ந்து உருண்டோடிய காலத்தில் அம்மா ஏன் ஏங்கவைத் தாயே! ஊட்டிய உங்களின் கரங்களில் நானாக உங்களை பற்றும் போது உங்கள் கரங்கள் அற்ற குறையைவிட உங்கள் நினைவால் உதிரம் வழியும் விழியை துடைக்க நீங்கள் இல்லை என் இதயம் உணர்ந்து உங்கள் நினைவு என்னை வாட்டுகிறது. எப் பிறப்பிலும் நீங்கள் எனக்கு மாதாவாக பிறக்கவேண்டும் என்று இறைவனிடம் வேண்டுகின்றேன்.

உடுவில் தெற்கு,
உடுவில்.

அன்பு மகள் - சோபிகா, அன்பு மருமகன்,
அன்பு சகோதரன் - ஜெயசிங்கம்

(cs.50943) (N-1)

## முதலாம் ஆண்டு நினைவுநாள்

தோற்றம் 02 • 08 • 1940



மறைவு 05 • 07 • 2022

அமரர்

### திரு. கந்தையா சிவலிங்கம் (சிவா)

(திதி:- பூர்வபட்ச சஷ்டி)

அன்புமொழி பேசி ஆதரவாய் எமக்கிருந்து
இன்பத்தை எமக்களித்த ஈடில்லா எம் அப்பாவே!
ஓராண்டு ஒரு நொடியாய் ஓடி மறைந்தாலும்
ஒவ்வொரு வினாடியும் ஆறவில்லை எம்துயரம்

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


செருக்கப்புலம் வீதி,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

(CS/25320)AH-1

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 19 • 12 • 1961



மறைவு 05 • 07 • 2022

கொட்டடியைப் பிறப்பிடமாகவும், அல்லைப்பிட்டி,
3ம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட

### அமரர் கந்தசாமி அன்பழகன்

அன்பிற்கு இலக்கணமாய்
அவனியில் வாழ்ந்து
பண்புடைமை காத்து
பக்குவமாய் வழி நடந்தீர்
இரக்கத்தின் இருப்பிடமாய்
ஈகை பல செய்து எல்லோருக்கும்
நல்லவராய் நாணயமாய் நடந்தீர்
ஏனோ நீங்கி எமைப் பிரிந்து போனீர்......!!
ஓராண்டு ஆன பின்னும்
ஈரம் காயவில்லையே

வாழ்ந்த காலம் வசந்தமானதே
நினைவுகளில் நின்று தவிக்கின்றோம்
இதயம் நிறைந்து நின்றவர் நீங்கள்
இறைவனாகியே வாழ்கிறீர் என்றும்
அமைதியாக துயிலும் தங்கள் ஆன்மா
இறைபதம் சேர இறைவனை
இறைஞ்சுகிறோம்!!
ஓம் சாந்தி!! சாந்தி!! சாந்தி!!

3ஆம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி.

மனைவி
அ.தியாகரதி (ரதி)

(CS/25267)AH-1 077 854 3144, 077 426 7817

## மரண அறிவித்தல்

தோற்றம் 17 • 06 • 1971



மறைவு 23 • 06 • 2023

### பொன்னம்பலம் தெய்வேந்திரம்

(ஓய்வுநிலை உத்தியோகத்தர் கிராமிய வங்கி, பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், பண்டத்தரிப்பு)

மாதகல் கிழக்கை பிறப்பிடமாகவும், டச்சு றோட், மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் தெய்வேந்திரம் (ஓய்வுநிலை உத்தியோகத்தர், கிராமிய வங்கி, பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், பண்டத்தரிப்பு) நேற்று (23.06.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் விஜயலட்சுமி தம்பதிகளின் பாசமிகு மகனும், காலஞ்சென்ற சச்சிதானந்தம் அருந்ததிதேவி தம்பதிகளின் பாசமிகு மருமகனும், கோமளாவின் ( ஆசிரியர், யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை) அன்புக் கணவரும், தில்லைநாதன் ( கனடா), புவனேஸ்வரி ( றஞ்சி - கனடா), வனிதா ( வவுனியா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், கோவிந்தராஜன் ( ஓய்வு நிலை உத்தியோகத்தர் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை), பரிமளா, பரஞ்சோதி, காலஞ்சென்றவர்களான யசோதா (ஆசிரியர், சென் திரேசா மகா வித்தியாலயம்), சாரதா (ஆசிரியர், சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம்) ஆகியோரின் மைத்துனரும், சாரங்கன், சங்கவி, குகப்பிரியன், குகவகிரன், குகவினூகன் ஆகியோரின் பாசமிகு சிறிய தந்தையும், மிதுலன், ரச்சலா, கவி, தனியா, மேனுயா, பிரணவப்பிரியன், சங்கீரணி ஆகியோரின் பாசமிகு மாமாவும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24.06.2023) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது மூளாய் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பித்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தில்லைநாதன்:- 416 857 4338
சாரங்கன்:- 076 726 9898


(CR40204)(J-1)

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணபதிதுணை





# சாவகச்சேரி கல்வயல் பெருங்குளம்
# அம்பலவாண வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்
## சோப கிருது வருஷ ப்ரம்மோற்சவத்தின் சிறப்பு மலர் - 2023



**விழா நிகழ்வுகள்**

| | | | |
|---|---|---|---|
| ◆ துவஜாரோகணம் | - 24.06.2023 | சனிக்கிழமை | பகல் 11.00மணி |
| ◆ ஸகோபுரவாசகம் (சப்பரம்) | - 01.07.2023 | சனிக்கிழமை | மலை 07.00 மணி |
| ◆ இரதோற்சவம் | - 02.07. 2023 | ஞாயிற்றுக்கிழமை | முற்பகல் 10.00 மணி |
| ◆ தீர்த்தோற்சவம் | - 03.07.2023 | திங்கட்கிழமை | முற்பகல் 10.00 மணி |
| ◆ துவஜ அவரோகணம் | - 03.07.2023 | திங்கட்கிழமை | மாலை 06.00 மணி |
| ◆ அருளாசி – மஹோற்சவ குரு | - சிவஸ்ரீ சோ.சக்திதரக்குருக்கள் சிவாகம க்ரியா வித்தகர், சிவபூஜாதுரந்தரர் | | |

### குருக்களின் அருள் ஆசி



ஆலய மஹோற்சவக் குரு

சிவஸ்ரீ சோ.சக்திதரக்குருக்கள்

சிவஸ்ரீ க.ச. சோமாஸ்கந்தக் குருக்கள்



உலகமெல்லாம் நிறைந்து விளங்கும் எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகர் உலக மக்களைக் காக்க தேரேறி அருள் பாலிக்க வருகிறார். கொடிய நோயின் தாக்கத்திலிருந்து மக்களை காத்து இரண்டு வருடங்களின் பின் அழகிய திருத்தேரில் ஆரோ-கணித்து சம்காரத் தொழிலை நிறை வேற்ற அடியவர் கூட்டம் அகம் மகிழ அருள் மழை பொழிய அம்பலவாண வீரகத்தி விநாயகர் பவனி இனிதே நிறைவேற அம்பலவாண வீரகத்தி விநாயகர் பாதம் பணிந்துவோமாக...

### ஆலய தர்ம பரிபாலகர்களின் எண்ணக்கருக்களின் சில துளிகள்

மனம் வாக்கு காயம் இவைகளால் எட்டமுடியாத அநாதியாகிய அருவமாம் பரப்பிரம்மம் தனது ஆன்மாக்களின் மேல் கொண்டுள்ள திருவருள் காரணமாக அருவநிலையில் இருந்து உருவநிலைக்கு இறங்கிவந்து ஆட்கொள்வதனை உணர்த்துவது "மஹோற்சவம்" ஆகும்.

"எக்காலத்திலும் வாக்கினாலும் பொல்லாத மனத்தினாலும் எட்டப்படாததும் ஆன்மாக்களின் அறிவினால் அறிந்து கொள்வதற்கு முடியாததும் ஆகிய தன்மைகளை உடைய சிவத்தினது நிலையினை வேறாக எடுத்து நோக்கி ஆராய்ந்து பார்த்து அது அறிவாகாரமான ஆன்மாக்களோடு பிரியாமல் கலந்து ஒன்றி இருந்து அருள் செய்வதனை உலகத்தாருக்கு தெரியவைக்கும் கொடி" இவை உமாபதிசிவாச்சாரியாரியாரின் "கொடிக்கவி" மூன்றாம்பாட்டின் பொருளாகும் ஆலயத்தின் கருவறையில் மறைபொருளாக "மூலமூர்த்தி" யாக எழுந்தருளி இருக்கும் எம்பெருமான் "உற்சவ மூர்த்தியாக எழுந்தருளி ஆன்மாக்களைத் தேடி கிட்ட வந்து தனது திருஅருள் பார்வை என்ற சாம்பவ தீச்சையினை கொடுத்து பஞ்ச கிருத்தியங்களான படைத்தல். காத்தல். அழித்தல். மறைத்தல். அருளல் கிருத்தியங்களை நிகழ்த்தி வீடுபேற்றினை (அருளல்) கொடுப்பதனை குறித்து நிகழ்த்தப்படும் விழாவே மஹோற்சவம் ஆகும். "துவஜா ரோகணம்" படைத்தலையும் தொடர்ந்து நிகழும் நிகழ்வுகள் காத்தலையும் குறிப்பனவாகும்.சப்பரம் எனப்படும் ஸகோபுரவாகனம் எம்பெருமான் இராஜகோபுர வாசலில் எழுந்தருளுவதனை குறிப்பதாகும்.

இராஜ கோபுரத்துக்கு சமமான வாகனம் என்பதே ஸகோபுர வாகனம் (சப்பரம்) இரதோற்சவமானது எம் பெருமானினால் ஆன்மாக்களுடைய ஆணவம். கன்மம். மாயை எனப்படும் மூன்று மலங்களாகி அழுக்குகளை பரிபாகம் செய்து அழித்தல் ஆகும்.

துவஜ அவரோகணம் (கொடி இறக்கல்) தொடர்ந்து நிகழும் மௌன உற்சவம் ஆதியன மறைத்தல். அருளல் ஆதி கிருத்தியங்கள் ஆகும்.நம் உடம்பின் மூலாதாரத்தில் சுருண்டு பாம்பு போல படுத்து இருக்கும் குண்டலினி சக்தியானது நமது சைவ நாற்பாதங்களாகிய சரியை. கிரியை யோகம். ஞானம் என்னும் படி முறைகளினால் பக்குவப்பட்டு சுருளை விரித்து சுவாதிஷ்டானம் மணிபூரகம் அனாகதம் விசுக்கி ஆக்கினை வழியே மேல் ஏறி படம் விரித்து நிற்கும் நிலை (ஞானியின் நிலை) யினை ஏறிய கொடிச்சீலையும் கொடிமரமும் குறிக்கும்.

கொடிமரம் முள்ளம் தண்டு ஆகும். சுருட்டி வைத்திருக்கும் கொடிச் சீலை குண்டலினி சக்தியாகும் மஞ்சட் கயிறு திருவருட்சக்தி தர்ப்பைக் கயிறு அழியாத மலமான ஆணவமலம் ஆகும்.கன்மம் மாயை எனும் மலங்கள் நீங்கினால் ஆணவமலம் செயல் இழந்து உயிர் அற்ற கயிறு போல ஆகிவிடும். மற்ற இருமலங்களும் தான் ஆணவ மலத்திற்கு சக்தியினை கொடுத்து ஆட்டுவிப்பவை ஆகும்.

**அதனால் தான் ஆக்கையாற் பயன் என் - அரன்**

கோவில் வலம் வந்து பூக்கையால்
அட்டி போற்றி என்னாத
இவ் ஆக்கையால் பயன் என்
என்றுபாடியருளினார் நாவுக்கரசர்.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலன் ஐந்து காளா மணிவிளக்கே
என்றார் திருமூலர்

**"கற்றதானல் ஆய பயன் என் கொல்வாலறிவன்
நற்றாள் தொழார் எனில்"**

என்றார் திருவள்ளுவர் இவைகளை கருத்தில் எடுத்து இந்த தசதின மஹோற்சவ காலங்களில் உள்ளூரில் வசிக்கும் அடியவர்கள் எல்லோரும் மனம். வாக்கு. காயம் மூன்றினாலும் எமது புலம் பெயர்ந்துவாழும் உறவுகளாகிய அடியவர்கள் மனத்தினாலும் தரிசித்து "ஸகல செல்வயோகம் மிக்க பெருவாழ்வு" வாழ எமது அம்பலவாண வீரகத்தி விநாயகப் பெருமானின் பேரருளையும் பெருங்கருணையினையும் பெற்று உய்வீர்களாகுக



திருச்சிற்றம்பலம்
அகர உகர மகர மே உருவாம்
ஏக தந்தனை எமது உள்ளத் திருத்தி
இக பர சுகங்களை எளிதினில் பெற்று
ஜெகதலம் புகழ செழித்து இனிது வாழ்வோம்
திருச்சிற்றம்பலம்

**ஆலய தர்மபரிபாலன சபை சார்பாக**

**தலைவர்**
**வேலுப்பிள்ளை முருகதாசன்**

**செயலாளர்**
**இராசைய கிருஷ்ணசாமி**



# ப்ரமமோற்சவம் சிறப்புற பிரார்த்திப்பவர்கள்
சாவகச்சேரி பிரபல வர்த்தகர்
# சண்முகம் அன் சன்ஸ் கண்டி வீதி, சாவகச்சேரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 24.07.1943

உதிர்வு 10.07.2016

இணுவில் மேற்கைச் சேர்ந்த

### அமரர் ஆழ்வாப்பிள்ளை சின்னாச்சி

திதி: வளர்பிறை ஷஷ்டி (24.06.2023)

கண் முன்னே வாழ்ந்த காலம் கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம் எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து நீங்கள் விண் நோக்கிச் சென்று
ஏழாண்டுகள் சென்றாலும் கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்.....

உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்

ஆ. சிறிதரன்
(ஜேர்மனி)

உங்கள் பிரிவின் துயரால் வாடும்
பிள்ளைகள்

(cs.50960) (N-1)

# மரண அறிவித்தல்



## கதிரர் மயில்வாகனம்

தோற்றம் 12.06.1933

மறைவு 21.06.2023

யாழ். எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும் புதுக்குடியிருப்பு தேவிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரர் மயில்வாகனம் அவர்கள் கடந்த (21.06.2023) புதன்கிழமை காலை 5.00 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரர் - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும்,காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - வள்ளிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சிலம்பு, வயிரமுத்து ஆகியோரின் அன்புச் சகோதரரும், திருமதி கனகம்மாவின் அன்புக் கணவரும், கனகரத்தினம், கிருஷ்ணலீலா, வனஜா (இலங்கை), சிறிரஞ்சன் (உதவும் இதயங்கள் பவுண்டேசன் இயக்குநர், ஜேர்மனி)), சிறிதாசன் (தொழிலதிபர் (இங்கிலாந்து) வகிந்தினி(கலா) (இங்கிலாந்து) சிறிகாந்தன் (இங்கிலாந்து) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பஞ்சலிங்கம், மல்லிகா, வேல்முருகு,(இலங்கை), நிலாஜினி (ஜேர்மனி), சஜிதா (இங்கிலாந்து), சிவகுமார் (இங்கிலாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும், டெனுசியா, கிருஷாந், கிசோபன், தர்சினி, தனுசன், வர்சிகா, தமிழ்பிரியன், ஆதித்தியன், துஷாலினி, யனுஸ், யதுஸ், அக்சா (பிரதீபன் டெனுசியா) ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.06.2023) ஞாயிற்றுக்கிழமை 7.00 மணியில் இருந்து 10.30 மணிவரை புதுக்குடியிருப்பு தேவிபுரம் வீட்டில் இடம் பெறும் அதனைத்தொடர்ந்து பிறந்த இடமாகிய எழுதுமட்டுவாள் எடுத்து சென்று பூதவுடல் (எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கு அருகாமையில்) 12.30 மணியில் இருந்து 14.30 மணிவரை அஞ்சலிக்காக வைக்கப்படும். பிற்பகல் 15.00 மணி அளவில் எழுதுமட்டுவாள் இராமியன் மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**

ம.சிறிரஞ்சன் மகன் Germany - 0049 1772061431-0049 15751700617
ம.சிறிதாசன் மகன் London - 0044 7477515935-0094 742097822
சி.வகிந்தினி மகள் London - 0044 7480230156
வே.வனஜா மகள் இலங்கை -0094 777208506

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 40210) A-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுத்தேர்தலை நடத்த ஜனாதிபதி ரணில் வியூகம்!

யாழ்ப்பாணம், ஜூன் 24

ஜனாதிபதித் தேர்தலுக்குச் செல்லாது பொதுத்தேர்தலை நடத்துவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பரிசீலித்துவருகின்றார் என அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

இது தொடர்பில் அரச தரப்புக்குள் ஜனாதிபதி ஆலோசனை நடத்தியுள்ளார் எனவும், மேலதிக ஆலோசனைக்காக 10 பேரடங்கிய நிபுணர் குழுவொன்று அமைக்கப்படலாம் எனவும் அறியமுடிகின்றது. செலவுக் கட்டுப்பாடு உள்ளிட்ட விடயங்களைக் கருத்திற்கொண்டே ஜனாதிபதி இவ்வாறு சிந்தித்து வருகின்றார் எனவும் கூறப்படுகின்றது.

மக்கள் மத்தியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கான செல்வாக்கு அதிகரித்துவரும் நிலையில், தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும் நோக்கில் ஜனாதிபதி பதவியில் நீடிப்பதற்கு ரணில் விக்கிரமசிங்க எதிர்பார்க்கின்றார் என்று நிபுணர்கள் அண்மைக்காலமாகச் சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது.

(அ-ம)

## பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவிக்கு பேராசிரியர் மஞ்சுள

கொழும்பு, ஜூன் 24

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பதவிக்கு, பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ நியமிக்கப்படுவதற்கு அரசமைப்புச்சபை அனுமதி வழங்கியுள்ளது.

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவராக இருந்த ஜனக ரத்நாயக்க, நாடாளுமன்றத் தீர்மானத்தின் மூலம் அண்மையில் பதவிநீக்கம் செய்யப்பட்டார். இதையடுத்து அவருடைய இடம் வெற்றிடமாக இருந்தது. புதியதொரு தலைவர் நியமிக்கப்படாமல் மின்கட்டணக் குறைப்பு உள்ளிட்ட விடயங்களில் தீர்க்கமான முடிவு எடுக்க முடியாமலிருந்தது. இந்த நிலையிலேயே, பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்படுவதற்கு அரசமைப்புச் சபை அனுமதி வழங்கியுள்ளது.

(அ-ம)




# மணிவிழா வாழ்த்து

யா/ கொழும்புத்துறை
சென் ஜோசப் வித்தியாலத்தில்
பணியாற்றி இன்று (24.06.2023)
சனிக்கிழமை மணிவிழாக்காணும்
திருமதி
ஜெயந்தினி சிவபாதம்
(B.A. Sci. Trd, PGDE)

அன்னைக்கும் மேலான
அரவணைப்பு தந்தீர்...
அறியாமை போக்கும்
அருந்தொண்டு செய்தீர்...
உயரிய பணியை
உயிர்ப்புடன் செய்தீர்...
ஊக்கம் தந்து
உயரத்தை கண்டீர்...

Congratulations

வாழ்த்துவோர்:
பெற்றோர்
சகோதரர்கள்
திரு.திருமதி ஜெயகாந்தன்
திரு.திருமதி ஜெயரூபன்
திரு.திருமதி ஜெகநாதன்
திரு.திருமதி வாகீஸ்வரன்
திரு.திருமதி ஜெயானந்தன்

(cr.40199) (N-1)




## தமிழர் ஒருவர் வெட்டிக்கொலை

### கொழும்பில் கொடூரம்

கொழும்பு, ஜூன் 24

கொழும்பில் தமிழர் ஒருவர் நேற்று வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் கொழும்பு, கொலன்னாவைப் பிரதேசத்தில் நேற்று மாலை 4.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சுப்பிரமணியம் தயாபரன் (வயது - 45) என்பவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். இவரின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் முகமூடி அணிந்து வந்த இருவர், கூரிய ஆயுதத்தால் அவரைச் சராமரியாக வெட்டிவிட்டுத் தப்பியோடியுள்ளனர். இரத்த வெள்ளத்தில் கிடந்த அவரை அயலவர்கள் மீட்டு, மருத்துவமனைக்குக் கொண்டுசென்ற போதிலும் அவர் முன்னதாகவே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கொடுக்கல் வாங்கல் விவகாரமே இந்தக் கொலைக்குக் காரணம் என ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளதையடுத்துக் கொலையாளிகளைத் தேடும் நடவடிக்கையில் பொலிஸார் களமிறங்கியுள்ளனர்.

(அ-ம-22)

## ஏ.ரி.எம். மோசடி: இளைஞன் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 24

நூதனமான முறையில் ஏ.ரி.எம். திருட்டில் ஈடுபட்ட இளைஞனை யாழ்ப்பாணம் நகர் பகுதியில் வைத்து நேற்றுக் கைது செய்ததாக யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத்தடுப்புப் பொலிஸார் தெரிவித்தனர். இது குறித்து மேலும் தெரியவருவதாவது:-

யாழ். நகரப் பகுதியில் பொதுச்சுகாதார பரிசோதகர் ஒருவர் அண்மையில், தனது ஏ.ரி.எம். அட்டையினை இட்டு பணத்தைப்பெற முயன்றபோது பணம் கிடைக்கவில்லை. இந்தநிலையில் ஏ.ரி.எம். இயந்திரத்துக்கு வெளியில் நின்ற இளைஞன், தான் பணத்தினை பெற்றுத் தருவதாகத் தெரிவித்து ஏ.ரி.எம். அட்டையை இட்டு இரகசியக் குறியீட்டை அறிந்துள்ளார். அருகிலுள்ள மற்றுமொரு இயந்திரத்தில் சோதித்துப் பார்ப்பது போல சென்று அங்கும் பணம் வரவில்லை எனத் தெரிவித்து அட்டையினை மீள வழங்கிவிட்டுச் சென்றுள்ளார். குறித்த சுகாதாரப் பரிசோதகர் வீட்டுக்குச் சென்று பார்த்தபோது 99 ஆயிரத்து 500 ரூபா பணம் மீளப்பெறப்பட்டிருந்தமை தெரியவந்தது. இதையடுத்து. அந்த இளைஞன் பொதுச்சுகாதாரப் பரிசோதகரின் ஏ.ரி.எம். அட்டைக்குப் பதிலாக பிறிதொரு அட்டையை வழங்கியமை தெரியவந்தது. இது தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டது. இதையடுத்து மேற்கொண்ட விசாரணைகளின் அடிப்படையிலேயே சந்தேகத்தின் அடிப்படையில் யாழ்ப்பாணம் நகர்ப்பகுதியில் வைத்து மேற்படி இளைஞன் கைதுசெய்யப்பட்டுள்ளார். சந்தேக நபருக்கு 24 வயது என்றும் அவரிடம் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(ம-125)


# மரண அறிவித்தல்

மலர்வு
25 . 12 . 1938



உதிர்வு
21 . 06 . 2023

## நடேசன் தெய்வானைப்பிள்ளை

மட்டுவிலை பிறப்பிடமாகவும் மீசாலை வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தெய்வானைப்பிள்ளை நடேசன் கடந்த (21.06.2023) அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி -தங்கம்மா தம்பதியின் மூத்த மகளும், காலஞ்சென்ற அம்பலவாணர் சிவகாமிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற அம்பலவாணர் நடேசன் அவர்களின் அன்பு மனைவியும், செல்லாச்சிப் பிள்ளையின் அன்புச் சகோதரியும், காலம்சென்ற கந்தையா, சிதம்பரப்பிள்ளை, குணவீரசிங்கம், செல்லம்மா மனோன்மணி ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்ற தம்பிஜயா, நாகம்மா, செல்லம்மா, சிவகுமார் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற முகுந்தன் (ஜேர்மனி) மற்றும் திருவேணி (யா/மீசாலை வீரசிங்கம் மத்தியகல்லூரி (ஆசிரியர்), ரவீந்திரன் (நோர்வே), கௌரிவேணி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், சுபாகரன், திலகவதி (ஜேர்மனி), கலைரூபி (நோர்வே), குணராசா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும், ரஜீபன் ராகீசன், ரட்சிகா (ஜேர்மனி), திவானுஜன், சுபானிஜன், கம்சியா(இலங்கை), துபிசன், விதுசன், வர்ணிகா (நோர்வே), ஆதிஸ்யன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு பேத்தியாரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (25.06.2023) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று வேம்பிராய் இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible] கோவில் வீதி
மீசாலை வடக்கு,
கொடிகாமம்.

0775235574
0763269629
0764184680

தகவல்:
குடும்பத்தினர்.

(CR 10209) A-1


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## லண்டனில்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க லண்டனில் கனடாவின் முன்னாள் பிரதமரும் சர்வதேச ஜனநாயக ஒன்றியத்தின் தலைவருமான ஸ்ரீபன் ஹூப்பருக்கு வழங்கிய கேள்வி - பதில் நிகழ்ச்சியில் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பில் கேட்டபோதே அவர்கள் இவ்வாறு கூறினர்.

**சி.சிறீதரன்**

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், காலக்கெடுக்களைக்கூறி தீர்வு வரும் என்றார். ஆனால் எதுவும் நடக்கவில்லை. சர்வதேச சமூகத்தை ரணில் ஏமாற்றுகின்றார். இலங்கையிலுள்ள தலைவர்கள் பிரச்சினையைத் தீர்க்கமாட்டார்கள். காணிகளை விடுவிப்பதாகச் சொல்கிறார்கள். ஆனால் காணிகளை விடுவிப்பதற்கான எந்தவொரு ஆயத்தங்களையும் காணவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகம் தோல்வியடைந்து அடுத்த ஏமாற்றுக்காக உண்மை நல்லிணக்க ஆணைக்குழுவை உருவாக்க முயல்வதாகக் கூறுகின்றார்கள். சர்வதேச சமூகம் இலங்கைத் தலைவர்கள் சொல்வதை நம்பக்கூடாது. உண்மையை நேரில் வந்து அறிந்துகொள்ளவேண்டும். ஜனாதிபதி ரணிலின் கருத்தைக் கண்டிக்கின்றேன் - என்றார்.

**சித்தார்த்தன்**

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத்தலைவரும் புளொட் அமைப்பின் தலைவருமான நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், அரசியல் கைதிகள் விடயத்தில் மாத்திரம் சிறிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. காணி விவகாரத்தில் தொல்பொருள் திணைக்களம் ஊடாகப் புதிதாக பிரச்சினைகள் உருவாகியுள்ளன. அரசியல் தீர்வு தொடர்பில் முடிவெடுக்கப்படவில்லை. முன்னைய ஜனாதிபதி கோத்தாபய தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் பேசவில்லை. இவர் பேசினாலும் முடிவுகள் எடுக்கப்படவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம், காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவுகளாலேயே நிராகரிக்கப்பட்டதொன்று - என்றார்.

**செல்வம் அடைக்கலநாதன்**

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத்தலைவரும் ரெலோ அமைப்பின் தலைவருமான நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், இராணுவப் புலனாய்வுப் பிரிவின் கைகளில் காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் இருக்கின்றது. மக்கள் அதனை நிராகரித்துள்ளனர். காணி விடுவிப்பில் எதுவும் நடக்கவில்லை. ரணிலுடன் நடந்த பேச்சுக்களில் எந்தப் பிரயோசனமும் இல்லை. சர்வதேச சமூகத்தை ஈர்ப்பதற்காக ரணில் பொய்யுரைத்துள்ளார் - என்றார்.

**கஜேந்திரகுமார் பொன்னம்பலம்**

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழர் தாயகத்தில் பௌத்த - சிங்கள மயமாக்கல் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றது. இவற்றை மூடி மறைப்பதற்கு தமிழ் மக்கள் தன்னுடன் உள்ளார்கள் என்று காண்பிப்பதற்கு தமிழ்ப் பிரதிநிதிகளுடன் பேச்சு நாடகத்தை நடத்துகின்றார். அதை சர்வதேச சமூகத்தின் முன்பாக வைத்து தன்னை நியாயப்படுத்துகிறார். ரணில் விக்கிரமசிங்க பொய் சொல்வார் என்பதில் ஆச்சரியமில்லை. அவர் கூறும் பொய்யை உண்மையாக்குவதற்கு எமது தாயகத்திலுள்ள தமிழ் தரப்புக்கள் தொடர்ந்துஅவருக்குமுட்டுக்கொடுக்கின்றன என்பதுதான் துரதிர்ஷ்டவசமானது. காணாமல் ஆக்கப்பட்டோர் பணியகத்தை அதனுடன் தொடர்புடைய தரப்புக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. அந்தப் பணியகத்தின் வெற்றிடங்களைக் கூட பூர்த்தி செய்வதற்கு இவர்களுக்கு விருப்பமில்லை. தமிழ் மக்கள் ரணிலுக்கு எதிர்ப்பு வெளியிட்டுவரும் நிலையில் சர்வதேச சமூகத்தின் முன்பாக அப்பட்டமாகப் பொய்யுரைத்துரைக்கின்றார் - என்றார்.

**சுரேஷ் பிரேமச்சந்திரன்**

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளரும் ஈ.பி.ஆர்.எல்.எப். அமைப்பின் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், ரணிலுடன் பேச்சுக்கு சென்ற சம்பந்தன் அவர் ஏமாற்றியதாகச் சொன்னார். ஆனால் ரணில் அதை எப்படிப் பயன்படுத்தியிருக்கின்றார் என்பது லண்டன் பேச்சில் தெரிகிறது. காணிப் பிரச்சினை தீர்க்கப்பட்டதாக வீரவசனம் பேசியிருக்கின்றார். ஆனால் இங்கே குருந்தூர், திரியாய் என்று புதிதாக காணிப் பிரச்சினைகள் உருவாகியிருக்கின்றன. காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகம் வெறும் கண்துடைப்பே. ஜூலைக்கு முன்னர் தீர்வு வழங்குவது நல்ல விடயம். ஆனால், அதற்குரிய அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை - என்றார். (அ-ஓ.5.125)

## ரணில்...

உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ரணில் விக்கிரமசிங்க கூறியதில் ஓரளவு உண்மை உள்ளது. அவர் குறிப்பிட்ட விடயங்களில்சிறிய முன்னேற்றம் உண்டு. அவர் சர்வதேச சமூகத்திடமிருந்து தனக்கு நன்மைகளைப் பெறுவதற்காகத்தான் இவ்வாறு செய்கின்றாரா என்பது தெரியவில்லை. காணாமல் ஆக்கப்பட்டோரைத் தேடும் உறவினர்களுடன் பேசியிருக்கின்றார். 13 ஆவது திருத்தத்தில் பிடுங்கப்பட்ட அதிகாரங்களை மீளளிக்க குழு அமைக்கப்பட்டுள்ளது. அதில் விடயங்கள் நடக்கின்றன. வன உயிரிகள் திணைக்களம், வன வளத் திணைக்களம் என்பன ஆக்கிரமித்த காணிகளை 1985ஆம் ஆண்டுக்கு முந்தைய நிலைமையை வைத்து விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

தொல்பொருள் திணைக்களத்துக்கு வடக்கு - கிழக்கில் தேவையற்று காணிகளை ஆக்கிரமிக்கவேண்டாம் என்று ஜனாதிபதி கூறியிருந்தார். அது நடைமுறையாகி வருகின்றது. அஸ்கிரிய மகாநாயக்க தேரர், ஏன் இவ்வாறான நடவடிக்கைகளை நிறுத்துகின்றீர்கள் என்று கேட்டதிலிருந்து இந்த விடயம் உறுதியாகின்றது. அவர் சில விடயங்களைச் செய்தார் என்பது உண்மை. அது எங்களுக்கு எப்படி நன்மைகளைப் பெற்றுத் தரும் என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். அரசியல் கைதிகள் 10 பேரை விரைவில் விடுவிக்கப்படவுள்ளதாக நீதி அமைச்சர் கூறியிருந்தார். இதுதான் நிலைமை - என்றார். (அ-ஓ.5,125)

## இலங்கையில்...

18ஆம் திகதி, கனடாவில் இடம்பெற்ற முள்ளிவாய்க்கால் நிகழ்வொன்றில் கலந்துகொண்ட கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ, இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது. பாதிக்கப்பட்ட தமிழர்களுடன் கனடா துணைநிற்கும்' என்று தெரிவித்திருந்தார். ட்ரூடோவின் கருத்துக்கு இலங்கை அரசாங்கத்தின் தரப்பிலிருந்து கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன. சிங்கள அரசியல்வாதியொருவர், ஆங்கில ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில், 'ட்ரூடோவின் கருத்து அவருடைய தனிப்பட்ட கருத்து. அவருடைய கருத்து கனடா அரசாங்கத்தின் நிலைப்பாடு இல்லை என்று இலங்கைக்கான கனேடியத் தூதரகம் தெரிவித்தது' என்று தெரிவித்திருந்தார். இதை, கனேடியத் தூதரகம் மறுத்துள்ளது.

'இலங்கையில் இனப்படுகொலை இடம்பெற்றது என்ற கனேடிய அரசாங்கத்தின் நிலைப்பாட்டில் எதுவித மாற்றமுமில்லை. முன்னாள் ஜனாதிபதிகளான மஹிந்த, கோத்தாபய மற்றும் இராணுவத் தளபதிகள் இருவர் மீதான தடையும் தொடர்ந்து நடைமுறையில் உள்ளது' என்று கனேடியத் தூதரகம் தெரிவித்துள்ளது. (அ-ம-6)

## கனடாவுக்கு...

வின் நிலைப்பாடுகளைக் கண்டித்தும் கொழும்பு, மட்டக்களப்பு போன்ற பகுதிகளில் நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

கொழும்பிலுள்ள கனேடியத் தூதரகத்துக்கு முன்பாக, சிங்கள ராவய அமைப்பின் ஏற்பாட்டில் நேற்று ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது. கனடாவுக்கும், கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோவுக்கும் எதிரான பதாகைகளை ஏந்தியவாறு இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. போர்க்குற்றத்தை இராணுவத்தினர் செய்யவில்லை என்றும், புலிகளே போர்க்குற்றத்தைச் செய்தனர் என்றும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் வலியுறுத்தினார்கள்.

அத்துடன், மட்டக்களப்பு மகாத்மா காந்தி பூங்காவுக்கு முன்பாகவும் நேற்று ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது. 'ஜஸ்ரின் ட்ரூடோவே இலங்கையை விட்டுவிடுங்கள்', 'இலங்கை இராணுவத்தினர் போர்க்குற்றம் புரியவில்லை', 'சுதந்திர நாடான இலங்கை, பிரிவினைவாத கனடா அரசாங்கத்தின் செயற்பாடுகளைக் கண்டிக்கின்றது', 'பயங்கரவாதத்துக்கு ஆதரவளிப்பதுதான் கனடாவின் ஜனநாயகமா?' உள்ளிட்ட வாசகங்கள் எழுதிய பதாகைகளை அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் ஏந்தியிருந்தனர்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 53ஆவது அமர்வு தற்போது இடம்பெற்று வருகின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வுகள் வழமையாக இடம்பெறும் போது இவ்வாறான போராட்டங்கள் அரச ஆதரவுக் குழுக்களின் ஏற்பாட்டில் கடந்த காலங்களிலும் முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

## பிரபாகரனின்...

வர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடைய மரபணு தொடர்பான அறிக்கையை வழங்கமுடியாது என்று கூறுவது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாகும். விடுதலைப் புலிகளினுடைய தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இறந்துவிட்டார் என்பதனை இந்த அரசு நிரூபிக்கவில்லை. இந்த அரசால் பிரபாகரன் இறந்தமைக்கான மரணச் சான்றிதழ் இதுவரை வழங்கப்படவில்லை.

நீதிமன்றத்தில், கதிர்காமர் கொலை வழக்கு இடம்பெற்றபோது நான் முன்னிலையாகியிருந்தேன். ஒரு அதிகாரியினுடைய அறிக்கையைத்தான் சமர்ப்பித்திருந்தார்கள். நான் அதற்கு ஆட்சேபணை தெரிவித்து இருந்தேன். அதிகாரியினுடைய அறிக்கையைக் கொண்டு மரணத்தை உறுதிப்படுத்தமுடியாது. ஒருவர் இறந்தால் அது மரணச் சான்றிதழ் மூலமே உறுதிப்படுத்த முடியும் என நான் வாதத்தினை மேற்கொண்டிருந்தேன். மரணச் சான்றிதழ் இல்லாவிட்டால் ஒருவர் இறந்து விட்டார் என்பதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று குறிப்பிட்டிருந்தேன். இருந்தபோதும் இன்றுவரை மரணச் சான்றிதழ் வழங்கப்படவில்லை. இந்த அடிப்படையில் பிரபாகரனின் மரபணு அறிக்கை விடயம் வழங்கப்படவேண்டும். பிரபாகரனின் இறப்புக்கு மரணச் சான்றிதழ் வழங்கப்படவேண்டும். தேசியப் பாதுகாப்புக்கும், மரபணு அறிக்கைக்கும் என்ன சம்பந்தம் என்று புரிந்துகொள்ள முடியவில்லை - என்றார். (அ-ம-125)

## சமுர்த்தி...

முகாமையாளர்களுடனான கூட்டம் நேற்று இடம்பெற்றது. இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ். மாவட்டத்தில் உள்ள பிரதேச செயலகங்களில் கீழ் பணியாற்றும் சில சமுர்த்தி உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் எனக்கு நேரடியாக முறைப்பாடுகள் வருகின்றன. அரச உத்தியோகத்தர்கள் தமக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளை உரிய வகையில் நிறைவேற்றிக் கொள்ள வேண்டும். அதனை விடுத்து பணியாற்றும் பகுதிகளில் தமது அரச பணியை அபகீர்த்திக்கு உள்ளாக்கும் வகையில் செயற்பாடுகளை மேற்கொள்வதை அனுமதிக்கமுடியாது. ஆகவே குறித்த விடயம் தொடர்பில் அரச சேவை ஒழுங்காற்று விதிகளுக்கு அமைய சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளத் தயங்க மாட்டேன். தொப்பியை அளவானவர்கள் மட்டும் போட்டுக் கொள்ளவும் - என்றார்.

இந்தக் கலந்துரையாடலில், கடற்றொழில் அமைச்சர்டக்ளஸ்தேவானந்தா, மேலதிக மாவட்டச் செயலர் முரளிதரன் (காணி), பிரதேசசெயலாளர்கள், சமுர்த்தி முகாமையாளர்கள் உட்படபலரும் கலந்துகொண்டனர். (அ-ம,27.125)

## 200 கிராம்...

யில் வைத்து 200 கிராம் ஐஸ் போதைப் பொருளுடன் இளைஞர் ஒருவர் நேற்று இரவு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நாச்சிக்குடாவைச் சேர்ந்த 32 வயதுடைய இளைஞரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளார். முல்லைத்தீவு மாவட்ட விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த புலனாய்வுத் தகவலுக்கமையவே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. சந்தேகநபரும் சான்றுப்பொருளும் யாழ். பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்ட நிலையில் யாழ்ப்பாணம் பொலிஸார் குறித்த நபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனர். மேலதிக விசாரணைகளும் யாழ்ப்பாணம் பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-125)

## ரூபா...

வங்கி வெளியிட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் நேற்றையதினம் அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவுப் பெறுமதி 299.03 ரூபாவாகவும், விற்பனைப் பெறுமதி 314.36 என்றவாறாகவும் பதிவானது.

சில நாள்களுக்கு முன்னர், ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்த நிலையில் தற்போது மீண்டும் உயர்வடைந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜூன் 30ஆம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை அடையாளப்படுத்தும் மதிப்பீட்டு அறிக்கையில் மன்னாரில் விடுபட்ட மற்றும் உள்வாங்கப்படாத பயனாளிகள் மூன்றாவது நாளாகவும் மன்னார் மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மாவட்டச் செயலகத்துக்கு முன்பாகவுள்ள பிரதான வீதியை மறித்து அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். நலன்புரி நன்மைகள் சபையால் வெளியிடப்பட்டிருக்கும் பயனாளிகள் பட்டியலில் உள்ளவர்கள் பணம் படைத்தவர்களாகவும் வசதிவாய்ப்புக்கள் உள்ளவர்களாகவுமே உள்ளனர். பாதிக்கப்பட்டவர்களும் வறுமை நிலையில் உள்ளவர்களும் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்டச் செயலரின் கவனத்துக்கு அவர்கள் கொண்டு சென்றனர்.

இதையடுத்து, பாதிக்கப்பட்டவர்கள் அல்லது இந்தத் திட்டத்தில் தாம் உள்வாங்கப்பட்டிருக்கவேண்டும் என்று கருதுபவர்கள் எதிர்வரும் 30ஆம் திகதி வரை மேன்முறையீடு செய்ய முடியும் என்று மாவட்டச் செயலர் ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

'30ஆம் திகதிக்குப் பின்னர் ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் விசாரணைக்குழு நியமிக்கப்படும். அந்த விசாரணைக்குழு உங்கள் மேல் முறையீட்டு விண்ணப்பத்தை பரிசீலனை செய்து உங்களிடம் விசாரணைகளை மேற்கொள்வார்கள். அதன் பின்னரே தெரிவுப் பட்டியலில் இடம்பெற நீங்கள் தகுதி உள்ளவரா?, இல்லையா? என்ற தெரிவு இடம்பெறும். அதன் பின்னர் இறுதித் தெரிவுப் பட்டியல் அனுப்பப்படும் 'என்றும் அவர் தெரிவித்தார். இதையடுத்து போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தற்காலிகமாகப் போராட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்தனர். (அ-ம-56)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பின் கீழ் நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலின்போது, கடந்த 2008ஆம் ஆண்டு கைது செய்யப்பட்டு அரசியல்கைதியாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள தேவதாஸ் கனகசபை கடும் நோயால் பாதிக்கப்பட்டிருப்பதால் அவரை உடனடியாக விடுதலை செய்யுமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது. இந்தக் கோரிக்கையின் பிரகாரம் குறித்த அரசியல்கைதி நேற்று விடுதலை செய்யப்பட்டுள்ளார். (ம-22)


### English Classes
Gr.1 to O/L
Grammar with Spoken
வீடு வந்து கற்பிக்கப்படும்.
077 331 4608 - யாழ்ப்பாணம்

### கட்டடம் வாடகைக்கு
206/2, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்
2300 சதுரடி கொண்ட கட்டடம் வாடகைக்கு உண்டு. (CDB வங்கிக்கு மேல் மாடி)
077 360 9005

### காணி விற்பனைக்கு
அச்சுவேலிச் சந்தி, தொண்டைமனாறு வீதி, நடைதூரம், Rice Mill இருந்த காணி 10.5 பரப்பு பத்தமேனி சந்திக்கு அண்மையில் வசதியான காணி விற்பனைக்குண்டு.
(CR/40198) AH-1
076 665 2649, 074 205 8803

### காணி விற்பனைக்கு
கல்வியங்காட்டில் நல்ல சுற்றாடலில் 1 3/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.
077 781 3417

### வீட்டுப் பணிப்பெண் தேவை
வீட்டு வேலைக்கு பணிப்பெண் தேவை.
யாழ். நகருக்கு உட்பட்டவர்கள் மட்டும் தொடர்பு கொள்ளவும்.
(CS25331)(J-1) 077 776 3533

### வேலையாட்கள் தேவை
- மேசன் - 2500 - 3000 (நன்கு அனுபவமுள்ள)
- மேசன் - 2500.00
- மேசன் உதவியாளர் - 2000.00
- பெயின்ரர் - 2000 - 2500
- வெல்டர் உதவியாளர்

தங்கி நின்று வேலைசெய்வோருக்கு தங்குமிடம் மற்றும் உணவு வழங்கப்படும்.
தொடர்புகொள்ளும் நேரம்:
(காலை 8.00 - மாலை - 5.30 )
(Cs 25328) (M-1)
தொடர்பு: 077 210 0749

### காணி விற்பனைக்கு உண்டு
யாழ்ப்பாணம் புத்தூரில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
* பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
* புத்தூரில் தண்ணீர் தாங்கி அருகாமை (நிலப்பரப்பு)
* மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்.
* வியாபார நிலையங்கள் திருமண மண்டபங்கள் வீடு அமைப்பதற்கு உகந்த இடம்.
* பார்வையிடும் நேரம் காலை 06 மணிமுதல் மாலை 06 மணிவரை.
* நன்னீரூற்று.
* ஒரு பரப்பின் விலை 200,000/= ( இரண்டு லட்சம்) மட்டும்.

தொடர்பு: 076 733 6047, 076 7558 606
076 9119 371

### ஆங்கில ஆசிரியர் தேவை
முன்பள்ளி பாடசாலைக்கு ஆங்கில ஆசிரியர் (பெண்) உடனடியாகத் தேவை.
தகைமைகள் பரிசீலிக்கப்படும்.
077 656 5258
077 386 7458
(Smartkids Thirunelvely)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.

### அறை வாடகைக்கு
சுண்டுக்குளி பாடசாலைக்கு அருகாமையில் கொழும்புத்துறை வீதி, சந்தண மாதா கோவில் முன் ஒழுங்கை முகப்பில் உள்ள வீட்டில் ஒரு அறை மலசலகூட வசதியுடன் வாடகைக்குண்டு. பெண் உத்தியோகத்தர்கள் அல்லது உயர்கல்வி மாணவிகள் விரும்பத்தக்கது.
திருமதி T.தங்கநாதன்
18/6, சந்தனமாதா கோவில் முன் ஒழுங்கை, சுண்டுக்குளி.
077 236 5463

### உடனடி வேலைவாய்ப்புகள்
- Accounts Clerk 3 வருட அனுபவமுள்ள பெண் ஊழியர் தேவை.
- Typesetter (தமிழ், ஆங்கிலம்) 3 வருட அனுபவமுள்ள ஆண்/ பெண்.
- Sales & Marketing முன்னனுபவமுள்ள ஆண் ஊழியர் தேவை.

(CS25320)AH-1
K.V. Printers Books Distributing Centre
386, Clock tower road, Jaffna.
075 878 2924, 021 720 0237, 077 878 2924

### நடைபெறுகின்றது
Accounting - D.Sam
A/L 2K23, 2K24, 2K25
English Medium & தமிழ்மொழி மூலம்

| சனி, ஞாயிறு | English | தமிழ் |
|---|---|---|
| 06 - 07 | AL - 2023 | – |
| 07 - 08 | AL - 2024 | – |
| 08 - 09 | AL - 2025 | – |
| 09 - 10 | – | AL - 2024 |
| 10 - 11 | – | AL - 2025 |
| 11 - 01 | – | AL - 2024, AL - 2023 |
| 01 - 02 | – | AL - 2023 |

DMI Jaffna


## மரண அறிவித்தல்

தோற்றம் 01 - 11 - 1941



மறைவு 22 - 06 - 2023

### திரு. கதிரவேலு துரைராசா

(ஓய்வுபெற்ற பிரதம புகையிரத பாதுகாப்பு உத்தியோகத்தர்)

இருபாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், கீரிமலையை வதிவிடமாகவும், தற்போது திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கதிரவேலு துரைராசா கடந்த (22.06.2023) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு - மாணிக்கம் தம்பதிகளின் ஏகபுத்திரனும், காலஞ்சென்றவர்களான முருகேசு - இராசம்மா தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற தவமணிதேவி மற்றும் மகாலட்சுமி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஜெகதீஸ்வரியின் அன்புக் கணவரும், மேனகா (ஆயுள்வேத வைத்திய உத்தியோகத்தர் - யாழ். மாநகரசபை), பிரதீப் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் - கட்டடத் திணைக்களம் (வ.மா) முல்லைத்தீவு), கிரிதரன் (அஞ்சல் அதிபர் - லண்டன்), சுகிர்தா (தாதிய உத்தியோகத்தர் - அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும், தவநேசன் (ஆசிரியர் - யா/ இணுவில் மத்திய கல்லூரி), யோகாநந்தி (லண்டன்), நிஜந்தன் (பொறியியலாளர் - அவுஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும், வைஷால், மைத்திரி, சிறிநயா, மதுகரன், சித்தாத் ஆகியோரின் பாசமிகு பேரனும், ஜெகதீஸ்வரன், புஸ்பராணி, பாரதிதாசன், காலஞ்சென்றவர்களான லோகநாதன், முத்துலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (25.06.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாரியம்மன் வீதி,
திருநெல்வேலி.

(CS/50971)AH-1

தகவல்:
குடும்பத்தினர்.

021 223 0615

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 24.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.